**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம்,**

**திருவள்ளூர் மாவட்டம் - 602 025**

**சுற்று மடல் எண்: 62** **நாள் : 19.03.2020**

**என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!**

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.**

உலகம் அதிவேகமாக முன்னேறிக் கொண்டு வருவதில்

பெருமையும் கர்வமும் நம் தலைமுறைக்கு இருந்து வந்தது.

நம் முன்னோர்களை விட நாம் கொடுத்து வைத்தவர்கள்

என எண்ணிக் கொண்டிருந்தோம்.

அனைத்தையும் நொடிப்பொழுதில் Covid 19 ஒன்றுமில்லாமையாக்கிவிட்டது.

**'Beneath all uniforms a single body breathes'**

**என்ற Ulysis - இன் கவிதை வரிகள் உண்மையாகிவிட்டன.**

உலகின் மனிதர்கள் அனைவருமே

தன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய காலக்கட்டத்தில் இருக்கிறோம்.

இது ஒரு விதத்தில் நம் தலைமுறைக்குத் தேவையான பாடம் என்றே எண்ணுகிறேன்.

இந்த நேரத்தில் அதிகம் எழுதத்தோன்றவில்லை.

நாம் மனம் திரும்புவதைத் தவிர கடவுள் எதையும் எதிர்பார்க்கவில்லை.

இனியாவது அகந்தை தவிர்த்து அன்பைப் பற்றிக்கொள்வோமா?

வெறுப்பை உதறிவிட்டு சகோதார நேசத்தை சுதந்தரித்துக் கொள்வோமா?

நமது சுயநலம், சுயவிருப்பம் அனைத்தையும் விட்டு விட்டு ஆண்டவரிடம் சரணடைவோமா?

**என் அன்பார்ந்த வேண்டுகோள்!**

- ♣ அவசியமற்ற எந்தப் பயணமும் மேற்கொள்ளாமல் அமைதியில் இல்லங்களில் தங்கியிருங்கள்.
- ♣ அரசு சொல்லும் அறிவுரைகளை அலட்சியப்படுத்தாமல் செவிகொடுத்துச் செயல்படுத்துங்கள்.
- ♣ அனைத்து விதமான கூடுதல்களையும் கூட்டங்களையும் கண்டிப்பாகத் தவிர்த்து விடுங்கள்.
- ♣ திருயாத்திரைத் தலங்களுக்குக் கண்டிப்பாகச் செல்ல வேண்டாம்.
- ♣ அத்தியாவசியமான உணவுப்பொருட்களை 2 மாதங்களுக்காவது வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

♣ அந்நியர், வெளியாட்கள், பெற்றோர்களைச் சந்திப்பதைத் தவிர்த்துவிடுங்கள்.

♣ அரசின் உத்தரவினை மீறி மாணவிகளைப் பள்ளிக்கு வரச்சொல்லிக் கட்டாயப்படுத்துவதைக் கண்டிப்பாகச் செய்யாதீர்கள்.

♣ ஒவ்வொரு நாளும் இரவு 8.30 மணி முதல் 9 மணி வரை நற்கருணை ஆண்டவர் முன் அமைதியில் அமர்ந்து இந்தக் கொள்ளை நோய் நம் தாய் பூமியை விட்டு விலக அனைவரும் இணைந்து சபையாக உருக்கமாக மௌனமாகச் செபிப்போம்.

♣ காலரா கொள்ளை நோயின்போது வனத்து அந்தோனியாரிடம் நம் முன்னோர் காட்டிய பக்தி முயற்சியை நினைவு கூர்ந்து அனுதினமும் சிறிய வனத்து அந்தோனியார் செபத்தை இந்த நோய் நம் உலகை விட்டு விலக பக்தியோடு செபிப்போம்.

♣ அச்சம், அவநம்பிக்கையைத் தவிர்த்து ஆண்டவர் மீதுள்ள அளவு கடந்த நம்பிக்கையில் உறுதியாயிருப்போம்.

**<u>சகோதரிகள் கவனத்திற்கு</u>**

❖ இந்த மாதத்திற்கான எனது அனைத்து பணித்திட்டங்களும் ரத்து செய்யப்படுகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ மிக முக்கிய நிகழ்வுகள் அல்லாமல் எந்த பயணங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது.

**அடைக்கல அன்னை நம் அனைவரையும் அன்போடு காத்து**

**தம் போர்வைக்குள் வைத்துப் பாதுகாப்பாராக!**

அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்

Sr. Maria Philomi FBS

சபைத் தலைமை அன்னை